**Dinamalar**
**Title :**
**Author :**
**Location :**
**Article Date : 02/22/2015**

# வெளிநாடு வாழ் இந்தியருக்காக தனி வலைதளம்

புதுடில்லி, பிப். 22–

வெளிநாடு வாழ் இந்தியர்கள், தங்களின் புகார்களை பதிவு செய்ய, தனி வலைதளம் ஒன்றை மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ளது.

உதவியை குறிக்கும் வகையில், 'மதத்' என, பெயரிடப்பட்டுள்ள இந்த வலைதளத்தை, வெளியுறவு அமைச்சர் சுஷ்மா சுவராஜ், நேற்று தன் அலுவலகத்தில் அறிமுகப்படுத்தினார்.

அப்போது, பேசியதாவது:

வெளிநாடு வாழ் இந்தியர்கள், தூதரகங்களில் அளிக்கும் புகார்கள், டில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டு, உரிய உத்தரவின் பேரில், தூதரகம் நடவடிக்கை எடுக்கிறது.

இதனால், பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் ஏற்படும் தேவையற்ற



'மதத்' என, பெயரிடப்பட்டுள்ள வலைதளத்தை, துவக்கி வைத்த மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ்.

காலதாமதத்தை தவிர்க்கவே, 'மதத்' வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில், வெளிநாடு வாழ் இந்தியர் புகார் தெரிவிக்கலாம். குறிப்பிட்ட நாட்களுக்குள் புகாருக்கு பதில் அளிக்காவிட்டால், புகார் குறியீட்டு நிறம், பச்சையில் இருந்து சிவப்பாக மாறும்.

www.passportindia.gov.in. என்ற வலைதளத்தில், 'மதத்' வலைதளத்திற்கான இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, சுஷ்மா சுவராஜ் கூறினார்.